பிரஸார் பாரதி
இந்திய வானொலி, சென்னை-4
26 04 2025 **SATURDAY 12.40 PM**
ஆகாஷவாணி

தலைப்புச் செய்திகள்

- இளையோருக்கு கூடுதல் வேலைவாய்ப்புகளை உருவாக்குவதற்காக மத்திய அரசு தொடர்ந்து பல்வேறு நடவடிக்கைகளை மேற்கொண்டு வருவதாக பிரதமர் திரு நரேந்திர மோடி கூறியுள்ளார்.

- பஹல்காம் தீவிரவாத தாக்குதல் சம்பவத்திற்கு ஐ நா பாதுகாப்புக்குழு கடும் கண்டனம் தெரிவித்துள்ளது.

- தமிழகத்தின் சிவகாசி அருகே பட்டாசு ஆலையில் நேரிட்ட வெடி விபத்தில் மூன்று பேர் உயிரிழந்தனர்.

- ரஷ்யா – யுக்ரைன் இடையே விரைவில் ஒப்பந்தம் கையெழுத்தாகும் என்று அமெரிக்கா நம்பிக்கை தெரிவித்துள்ளது.

- ஆசிய இளையோர் குத்துச்சண்டை சாம்பியன் போட்டியில் இந்தியாவுக்கு 43 பதக்கங்கள் உறுதி செய்யப்பட்டுள்ளன.

*---- இனி விரிவான செய்திகள் ---*

**<<<<<<>>>>>>**

இளையோருக்கு கூடுதல் வேலைவாய்ப்புகளை உருவாக்குவதற்காக மத்திய அரசு தொடர்ந்து பல்வேறு நடவடிக்கைகளை மேற்கொண்டு வருவதாக பிரதமர் திரு நரேந்திர மோடி கூறியுள்ளார்.

மத்திய அரசு பணியிடங்களுக்கு புதிதாக தேர்வு செய்யப்பட்ட 51 ஆயிரம் பேருக்கு காணொலி வாயிலாக பணிநியமன ஆணைகளை வழங்கி அவர் பேசினார்.

நடப்பு நிதியாண்டிற்கான பட்ஜெட்டில் உற்பத்திக்கான இயக்கம் அறிவிக்கப்பட்டிருப்பதை அவர் சுட்டிக்காட்டினார்.

இது இளையோருக்கு எண்ணற்ற வாய்ப்புகளை வழங்கும் என்றும் அவர் கூறினார்.

வேலைவாய்ப்புகள் மட்டுமின்றி தொழில் முனைவோர்களாக இளையோரை உருவாக்குவதற்கும் இது உதவிடும் என்று பிரதமர் தெரிவித்தார்.

நாட்டின் வளர்ச்சியில் இளையோர் முக்கிய பங்கு வகிப்பதாகவும் அவர் கூறினார்.

இதனை கருத்தில்கொண்டு இளையோரின் மேம்பாட்டிற்கு தமது அரசு கூடுதல் முக்கியத்துவம் அளித்து வருவதாகவும் அவர் தெரிவித்தார்.

நம் நாட்டு இளையோரின் திறனை தற்போது உலகம் உணர்ந்திருப்பதாகவும் பிரதமர் கூறினார்.

நாடு முழுவதும் 47 இடங்களில் மத்திய அமைச்சர்கள் பங்கேற்று பணி நியமன ஆணைகளை வழங்கினர்.

சென்னை எழும்பூரில் நடைபெற்ற நிகழ்ச்சியில், மத்திய இணையமைச்சர் திரு பெம்மசாணி சந்திரசேகர் கலந்துகொண்டு பேசினார்.

இளைஞர்களின் கனவை நனவாக்கும் வகையில் பிரதமர் செயல்பட்டு வருவதாக அவர் தெரிவித்தார்.

சென்னையில் நடைபெற்ற மற்றொரு நிகழ்ச்சியில், மத்திய இணையமைச்சர் திரு Durga Das Uikey-யும், திருச்சியில் நடைபெற்ற நிகழ்ச்சியில், மத்திய இணையமைச்சர் திரு ஜுவல் ஓரமும் கலந்துகொண்டு பணிநியமன ஆணைகளை வழங்கினர்.

மத்திய அரசு வழங்கும் இந்த வாய்ப்புகள் தங்களை போன்ற இளையோருக்கு கூடுதல் உத்வேகம் அளிப்பதாக பணிநியமன ஆணைகளை பெற்றவர்கள் எமது செய்தியாளரிடம் தெரிவித்தனர்.

*(சவுண்ட்பைட் - பணி அமர்த்தப்பட்டவர்கள் - 62 செகண்ட்ஸ்)*

<<<<<<>>>>>>

பஹல்காம் தீவிரவாத தாக்குதல் சம்பவத்திற்கு ஐ நா பாதுகாப்புக்குழு கடும் கண்டனம் தெரிவித்துள்ளது.

இதுதொடர்பாக, ஐ நா பாதுகாப்புக்குழு வெளியிட்டுள்ள அறிக்கையில், உலக அமைதிக்கு அச்சுறுத்தலாக தீவிரவாதம் உள்ளதாக குறிப்பிட்டுள்ளது.

பஹல்காம் தாக்குதல் சம்பவத்திற்கு காரணமானவர்களையும், அதற்கு ஆதரவு அளித்தவர்களுக்கும் சட்டத்திற்முன் நிறுத்துவதற்கான தேவையான நடவடிக்கைகளுக்கு அனைத்து நாடுகளும் ஒத்துழைப்பு அளிக்க வேண்டும் என்றும் அதில் வலியுறுத்தப்பட்டுள்ளது.

இதற்கிடையே, ஜம்மு காஷ்மீரையொட்டிய எல்லைப்பகுதியில் பாதுகாப்புப்படையினர் துப்பாக்கிச்சூடு நடத்தினர்.

இதற்கு ராணுவம் உரிய பதிலடி கொடுத்துள்ளதாக மத்திய அரசு கூறியுள்ளது.

<<<<<<>>>>>>

பாகிஸ்தான், தீவிரவாத அமைப்புகளுக்கு ஆதரவு அளித்து வருவதாக அந்நாட்டு பாதுகாப்புத்துறை அமைச்சர் திரு Khawaja Muhammad Asif கூறியுள்ளார்.

இங்கிலாந்து தொலைக்காட்சிக்கு அளித்த பேட்டியில் இதனை தெரிவித்த அவர், பல ஆண்டுகளாக இந்த ஆதரவு வழங்கப்பட்டு வருவதாக கூறியுள்ளார்.

தீவிரவாத அமைப்புகளுக்கு நிதியுதவியும் வழங்கப்பட்டதாக திரு Khawaja Muhammad Asif தெரிவித்தார்.

<<<<<<>>>>>>

மத்தியப்பிரதேசத்தில் பாதுகாப்புப்படையினர் மேற்கொண்ட நடவடிக்கைளில் 4 பெண் நக்சலைட்டுகள் சுட்டுக்கொல்லப்பட்டனர்.

Balaghat மாவட்டத்துக்கு உட்பட்ட Supkhar வனப்பகுதியில் நக்சலைட்டுகள் பதுங்கியிருப்பதாக கிடைத்த தகவலையடுத்து, பாதுகாப்புப்படையினர் அப்பகுதியை சுற்றிவளைத்து தேடுதல் வேட்டையில் ஈடுபட்டனர்.

இதன் காரணமாக இருதரப்புக்கும் இடையே துப்பாக்கிச்சண்டை நேரிட்டது.

இதில் 62 லட்சம் ரூபாய் பரிசுத்தொகை அறிவிக்கப்பட்டிருந்த நக்சலைட் குழுவை சேர்ந்த நான்கு பேர் சுட்டுக்கொல்லப்பட்டனர்.

இதற்கிடையே, சத்தீஸ்கரில் நக்சலைட்டுகளுக்கு எதிராக பாதுகாப்புப்படையினர் தொடர்ந்து ஐந்தாவது நாளாக தேடுதல் வேட்டையில் ஈடுபட்டுள்ளனர்.

இதுவரை இல்லாத அளவிற்கு பெரிய அளவில் இந்த நடவடிக்கையை பாதுகாப்புப்படையினர் மேற்கொண்டு வருவதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

<<<<<<>>>>>>

கத்தோலிக்க திருச்சபை தலைவர் போப் பிரான்சிஸின் இறுதிச்சடங்குகள் வாடிகனில் உள்ள செயின்ட் பீட்டர்ஸ் சதுக்கத்தில் இன்னும் சற்றுநேரத்தில் நடைபெறவுள்ளது.

குடியரசுத் தலைவர் திருமதி திரௌபதி முர்மு, அமெரிக்க அதிபர் திரு டொனல்டு ட்ரம்ப் உட்பட பல்வேறு நாடுகளின் தலைவர்கள் இதில் பங்கேற்றுள்ளனர்.

<<<<<<>>>>>>

பிரதமர் திரு நரேந்திர மோடி மக்களிடையே மனம் திறந்து பேசும் மன் கி பாத் நிகழ்ச்சி, அகில இந்திய வானொலியில் நாளை காலை 11 மணிக்கு ஒலிபரப்பாகிறது.

நாட்டில் உள்ள அனைத்து வானொலி நிலையங்களும் இதனை அஞ்சல் செய்யும்.

பிரதமர் உரை முடிந்தவுடன் அதன் தமிழாக்கத்தை சென்னை அகில இந்திய வானொலி ஒலிபரப்பு செய்கிறது.

இது, இரவு 8 மணிக்கு மறு ஒலிபரப்பும் செய்யப்படுகிறது.

தமிழகம் மற்றும் புதுச்சேரியில் உள்ள அனைத்து வாானொலி நிலையங்களும் இதனை அஞ்சல் செய்யும்.

<<<<<<>>>>>>

பாதுகாப்பு மேம்பாட்டு ஆராய்ச்சி நிறுவனம் Scramjet Engine உருவாக்கத்தில் புதிய மைல்கல்லை எட்டியுள்ளதாக இந்திய அறிவியல் கல்வி மற்றும் ஆராய்ச்சி மையத்தின் பேராசிரியர் திரு த வி வெங்கடேஷ்வரன் கூறியுள்ளார்.

எமது செய்தியாளரிடம் பேசுகையில் அவர் இவ்வாறு கூறினார்.

*(சவுண்ட் பைட் - த வி வெங்கடேஷன் - 47 செகண்ட்ஸ்)*

<<<<<<>>>>>>

தமிழகத்தின் சிவகாசி அருகே பட்டாசு ஆலையில் நேரிட்ட வெடி விபத்தில் மூன்று பேர் உயிரிழந்தனர். ஐந்து பேர் காயமடைந்தனர்.

மருந்து கலவையின்போது உராய்வு ஏற்பட்டு இந்த விபத்து நேரிட்டதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

*(வாய்ஸ் பைட் - கமலக்கண்ணன் - 42 செகண்ட்ஸ்)*

<<<<<<>>>>>>

ரஷ்யா – யுக்ரைன் இடையேயான பிரச்சினைக்கு தீர்வுகாணும் வகையில், இருநாடுகளும் விரைவில் ஒப்பந்தம் ஒன்றில் கையெழுத்திட வாய்ப்புள்ளதாக அமெரிக்க அதிபர் திரு டொனல்டு ட்ரம்ப் கூறியுள்ளார்.

ரோமில் செய்தியாளர்களிடம் பேசிய அவர், ஒப்பந்தத்தின் முக்கிய அம்சங்களுக்கு இருநாடுகளும் ஒப்புக்கொண்டிருப்பதாக கூறினார்.

இதற்கிடையே, நிபந்தனையற்ற சண்டை நிறுத்தம் ஏற்பட்ட பின்னரே, ரஷ்யாவுடன் பேச்சுவார்த்தை நடத்தப்படும் என்று யுக்ரைன் அதிபர் திரு Volodmyr Zelensky கூறியுள்ளார்.

<<<<<<>>>>>>

ஆசிய இளையோர் குத்துச்சண்டை சாம்பியன் போட்டியில் இந்தியாவுக்கு 43 பதக்கங்கள் உறுதி செய்யப்பட்டுள்ளன.

ஜோர்டானின் அம்மானில் நடைபெற்றுவரும் இப்போட்டியின் ஆடவர், மகளிர் 15 மற்றும் 17 வயதுக்கு உட்பட்டோருக்கான பிரிவுகளில் நடைபெற்ற காலிறுதி ஆட்டங்களில் 43 பேர் வெற்றிபெற்று அரையிறுதிக்கு முன்னேறியுள்ளனர்.

-----------------

துருக்கியில் நடைபெற்றுவரும் சர்வதேச டென்னிஸ் போட்டியில் இந்தியாவின் Vaishnavi Adkar – அரையிறுதிக்கு முன்னேறியுள்ளார்.

மகளிர் ஒற்றையர் பிரிவு காலிறுதி ஆட்டத்தில் அவர், 6-1, 6-3 என்ற செட் கணக்கில், பெல்ஜியமின் Van Impe -ஐ வென்றார்.

------------------

துனிஷியாவில் நடைபெற்றுவரும் சர்வதேச மகளிர் டென்னிஸ் போட்டியில் இந்தியாவின் Zeel Desai அரையிறுதிக்கு முன்னேறியுள்ளார்.

மகளிர் ஒற்றையர் பிரிவு காலிறுதி ஆட்டத்தில் அவர், 6-4, 6-2 என்ற செட் கணக்கில், பல்கேரியாவின் Encheva –வை வென்றார்.

மகளிர் இரட்டையர் பிரிவு காலிறுதி ஆட்டத்தில் Zeel Desai - Gureva இணை வெற்றிபெற்று அரையிறுதிக்கு முன்னேறியது.

--------------

துனிஷியாவில் நடைபெற்றுவரும் சர்வதேச டேபிள் டென்னிஸ் போட்டியில் இந்தியாவின் Harmeet Desai மற்றும் Diya Chitale காலிறுதிக்கு முந்தைய சுற்றுக்கு முன்னேறியுள்ளனர்.

-----------

உலக தொடர் ஓட்ட சாம்பியன் போட்டியில் பங்கேற்பதற்கான இந்திய அணி அறிவிக்கப்பட்டுள்ளது.

சந்தோஷ் குமார் தமிழரசன், ஜெயக்குமார், ரோஹித்குமார் உட்பட எட்டு பேர் இதில் இடம்பெற்றுள்ளனர்.

இப்போட்டி சீனாவின் Guangzhou –வில் அடுத்த மாதம் 10-ஆம் தேதி தொடங்கி இரண்டு நாட்கள் நடைபெறுகிறது.

<<<<<<END>>>>>>